## BYOD—Bring Your Own Device (உங்கள் சொந்த சாதனத்தை எடுத்துவாருங்கள்)
### *மாணவரின் வெற்றியிற்கு பெற்றோர்கள் பங்களிக்கக்கூடிய முறை*

### 21ம் நூற்றாண்டிற்கான கற்பித்தல் மற்றும் கற்றலில் முன்னோடிகள்

Peel District School Board (பீல் பிராந்திய பாடசாலை மன்ற)த்தில், ஒவ்வொரு மாணவரிலும் வெற்றி, தன்னம்பிக்கை, மற்றும் நம்பிக்கை ஆகியவற்றை ஊக்குவிப்பதே எமது குறிப்பணியாகும். தொழில்நுட்பப் பாவனையில் முன்னோடிகள் என்ற முறையில், நாம் ஆக்கத்திறனுடைய, புத்தமைக்கும் கற்றலிற்கு ஊக்கமளிக்கின்றோம்.

இன்றைய மாணவர்கள் ஏற்கனவே தொழில்நுட்பத்தில் முன்னோடிகளாவர். அன்றாட வாழ்வில் பயன்படுத்தும் தொழில்நுட்பத்தை அவர்களின் வகுப்பறை அனுபவத்தின் ஒரு சாதாரணமான கூறாக அமைத்துக்கொள்ள விரும்புகின்றனர். இது அவர்களின் கற்றல் அனுபவங்களில் பிரதிபலிக்கப்பட்டால், மாணவரின் அதிகரித்த வெற்றியிற்கு வழிவகுக்கும் கூடியளவு ஈடுபாட்டை உண்டுபண்ணுவோம் என்பதை ஆராய்ச்சிகள் சுட்டிக்காட்டுகின்றன.

இதனாலேயே எமது மன்றத்தின் Vision for 21st Century Teaching & Learning (21ம் நூற்றாண்டிற்கான கற்பித்தல் மற்றும் கற்றலிற்கான நோக்கம்) பரபரப்பூட்டுவதொன்றாகக் காணப்படுகின்றது. எல்லா Peel (பீல்) மாணவர்களுக்கும் நாம் தொழில்நுட்பத்திற்காக முதலீடு செய்துள்ள $7 மில்லியன் ஆனது, எங்கள் பாடசாலைகள் கூடியளவு இணைக்கப்பட்டும் தொடர்புடையதாயும் காணப்படும் என்பதை உறுதிபடுத்தும்.

### BYOD மாணவர்களை வெற்றியிற்காக “சக்தி பெற” உதவுகின்றது

BYOD என்பது, கல்விசார் குறிக்கோள்களிற்காக மாணவர்கள் தங்கள் சொந்த சாதனங்களைப் பாடசாலையிற்கு எடுத்துவருவதைக் குறிக்கின்றது. வகுப்பறையில், மாணவர்கள் சாதனங்களைப் பொறுப்புள்ள முறையில் உபயோகிப்பர்; அத்துடன் ஆசிரியர் அல்லது வேறு அலுவலக அங்கத்தவரின் அனுமதி மற்றும் வழிகாட்டுகையுடன் மட்டுமே அவற்றை பயன்படுத்துவர்.

தொழில்நுட்பம் தனியே கற்றலை மேம்படுத்தாது என்பதில் ஐயத்திற்கு இடமில்லை. இருப்பினும், திறன்மிக்க அலுவலர்களிடமிருந்து பெறப்படும் சரியான கற்பித்தலுடன் அது ஒன்றிணைக்கப்படும் பொழுது வியக்கத்தக்கவை இடம்பெறக்கூடும். Peel (பீல்) மன்ற வகுப்புகளில் அதிகரித்த தொழில்நுட்பப் பாவனை காணப்படும்பொழுது, அது இன்றும், எதிர்க்காலத்திலும் மாணவரின் வெற்றியை “வலுவாக்க” வழிவகுக்கின்றது.

சொந்த சாதனங்கள் மிகச்சிறப்பாக அமைவதற்கான காரணங்கள் கீழ்வருமாறு:

- அவர்களின் சொந்த சாதனங்களுடன் மாணவர்கள் நிபுணர்களாவர்; தத்தம் கற்றல் தேவைகளிற்காக அச்சாதனத்தை மாற்றியமைத்துக்கொள்வர்.
- எப்பொழுதும், எங்கும் கற்றுக்கொள்ள அதை மாணவர்கள் உபயோகிக்கலாம்.
- பாடசாலை வேலைப்பாடுகளைக் குறித்து, பாடசாலைக்கு பின்னர் மாணவர்கள் சகவயதினருடன் சேர்ந்து செயற்படலாம்.
- பாடசாலைகளால் வழங்கப்படுபவற்றை விட மாணவர்களின் சொந்த சாதனங்கள் கூடியளவு நவீனமானவை.
- பாடசாலையின் உடைமைகளான சாதனங்கள் விலையுயர்ந்தவை, மற்றும் பேணுவதற்கு கடினமானவை.

### பெறுவழியிற்கான சமத்துவம் ஒரு முக்கிய முன்னுரிமையாகும்

எல்லா பெற்றோரும் தமது பிள்ளை/பதின்மவயதினரை ஒரு சாதனத்துடன் பாடசாலையிற்கு அனுப்புவதை விரும்பமாட்டார்கள் அல்லது அதற்கான வசதியைக் கொண்டிருக்கமாட்டார்கள் என்பதை

நாம் அறிவோம். அதனாலேயே, ஒவ்வொரு மாணவரும் சொந்த சாதனமொன்றை பாடசாலையிற்கு எடுத்துவருவார் என்று கருதாமல் ஆசிரியர்கள் தொடர்ந்து திட்டமிடுகின்றனர். ஒவ்வொரு நாளும் ஒவ்வொரு பாடத்திற்கும் தொழில்நுட்பம் உபயோகிக்கப்படாது. அதற்கென்று ஒரு பொருத்தமான நேரமும் அமைவிடமும் காணப்படுகின்றது.

பாடசாலையில் உபயோகிப்பதற்கென சாதனங்களும் வேறு தொழில்நுட்பமும் மாணவர்களுக்கு கிடைக்கத்தக்கதாக உள்ளன; அத்துடன், வகுப்பறைகளிலும் எல்லா மாணவர்களுக்கும் தொழில்நுட்பத்தை அணுகுவதற்கான கூடியளவு பெறுவழி காணப்படும். ஒரு வகுப்பறையில் நான்கு அல்லது ஐந்து சாதனங்கள் காணப்படுவதே ஒரு மாற்றத்தை உண்டுபண்ணக்கூடியதாகும். சேர்த்து உபயோகிக்கப்படும் பொழுது, தொழில்நுட்பம் கற்றலை மாற்றியமைக்கவல்லது.

மேலுமறிவதற்கு, YouTube இலுள்ள எங்கள் *Why BYOD?* நிகழ்படத்தை இங்கு பார்வையிடுங்கள்: http://bit.ly/why_byod.

**எந்த சாதனத்தைத் தேர்ந்தெடுப்பது?**

"என் பிள்ளை/பதின்மவயதினருக்கு நான் எந்த சாதனத்தைக் கொள்வனவு செய்யவேண்டும்?" என்று பெற்றோர் எம்மிடம் வினவியுள்ளனர். "எல்லோருக்கும் பொருந்துவதொன்று" என்று எதுவுமில்லை. இறுதியில், பெற்றோர் என்ற முறையில், எந்த சாதனத்தைக் கொள்வனவு செய்வது என்பதைக் குறித்த முடிவு (நீங்கள் உங்கள் பிள்ளையை ஒரு சாதனத்துடன் பாடசாலையிற்கு அனுப்பிவைக்க **தேர்ந்தெடுத்தால்**) உங்களுடையதே.

தயவுசெய்து கீழ்வருவனவற்றைக் கருதுங்கள்:

- தரம் மற்றும்/அல்லது பாடம்
- வகுப்பறையில் அத்தொழில்நுட்பம் உபயோகிக்கப்படும் முறை – ஆசிரியரின் பரிந்துரைகள்
- உங்கள் பிள்ளை/பதின்மவயதினரின் கற்றல் விருப்பங்கள்
- அச்சாதனத்துடன் உணரும் வசதி
- விலை

உங்கள் முடிவுடன் உதவுவதற்கு, ஒரு மாணவர் விதவிதமான சாதனங்களில் செய்யக்கூடியவை கீழே தரப்பட்டுள்ளன:

| சாதனம் | Internet (இணையம்) | நிகழ்படங்கள் மற்றும் புகைப்படங்களைப் பார்வையிடுதல் | புகைப்படக்-கருவி/ நிகழ்படப் புகைப்படக்-கருவி | நிகழ்படம் மற்றும் புகைப்படம் திருத்தியமைத்தல் | Web apps (இணைய செயலிகள்) (உதா. wikis, blogs, Java, Flash) | Office செயற்பாடுகள் (உதா. சொல் செயலாக்கம், அட்டவணைச் செயலிகள் |
|---|---|---|---|---|---|---|
| **iPod Touch** (Wi-Fi பெறுவழியுடன்) | ✓ | ✓ | ✓ | ✓ | மட்டிட்டது | மட்டிட்டது |
| **Smart phone** | ✓ | ✓ | ✓ | ✓ | மட்டிட்டது | மட்டிட்டது |
| **Tablets** | ✓ | ✓ | ✓ | ✓ | மட்டிட்டது | ✓ |
| **Laptops & Netbooks** | ✓ | ✓ | மட்டிட்டது | ✓ | ✓ | ✓ |

விளையாட்டுகளுக்கான சாதனங்கள் பரிந்துரையப்படுவன அல்ல.
பொருட்களின் அம்சங்கள் பகுப்புகளில் வேறுபடுகின்றன.

**சாதனங்களைப் பாதுகாப்பாக வைத்திருப்பதற்கு திட்டமிடுங்கள்**

பெற்றோர் என்ற முறையில், உங்கள் பிள்ளை அவரின் சாதனத்தைப் பாதுகாப்பாக வைத்திருப்பதைப் பற்றிய கவலை உங்களுக்கு காணப்படும். மாணவர்கள் தத்தம் சாதனங்களைப் பற்றி கூடியளவு விழிப்புள்ளதாக இருப்பதற்காக, ஒரு BYOD சுற்றாடலில், சாதனங்கள் எல்லோருக்கும் தென்படும்படி காணப்படுகின்றன. சாதாரணமாக, ஒருசில திருட்டுகளையும் தொலைவுற்ற சாதனங்களையுமே நாம் காண்கின்றோம்.

தத்தம் சாதனங்களை பாதுகாப்பாக வைத்திருக்க மாணவர்களுக்கு உதவுவதன் பொருட்டு, பாடசாலைகள் ஒரு திட்டத்தைக் கொண்டிருக்கும். ஆனால் இறுதியில், அவர்கள் பாடசாலைக்கு எடுத்துவரும் வேறெந்த சொந்த பொருட்களிற்கு போலவே, தொலைவுற்ற, களவுற்ற, மற்றும்/அல்லது சேதமுற்ற சொந்த மின்னணுவியல் சாதனங்களிற்கு மாணவர்களே பொறுப்பேற்கவேண்டும்.

உங்கள் மாணவரை ஒரு சாதனத்துடன் பாடசாலையிற்கு அனுப்பிவைக்க நீங்கள் திட்டமிட்டால், ஒரு பாதுகாப்பு உறையைக் கொள்வனவு செய்வதை தயவுசெய்து ஆராயுங்கள். அத்துடன், சில சாதனங்களில் உள்ளமைக்கப்பட்ட ஒரு இருப்பிடங்காட்டி காணப்படுகின்றது; அதை நீங்கள் செயல்படச் செய்தல் அவசியம்.

**சாதனங்கள் கற்றலிற்கு ஆதரவளிக்கும்**

நாம் கம்பியில்லா தொழில்நுட்பத்தை (Wi-Fi) நிறுவ ஆரம்பிக்கும் வேளையில், ஆசிரியர்கள் அவர்களின் பாடங்களில் கூடியளவு எண்ணியல் வளங்களைச் சேர்த்துக்கொள்ள ஆரம்பிப்பர். இவ்வளங்கள் கற்றல் பின்னணியை மாற்றியமைத்துள்ளன.

இன்று, மாணவர்களும் ஆசிரியர்களும் இணைய-அடிப்படையிலான உள்ளடக்கம், வளங்கள், நிபுணர்கள், ஆராய்ச்சிகள், மற்றும் சேர்ந்துசெயற்படுத்தற் கருவிகள் ஆகியவற்றை அணுகத்தக்கதாகவுள்ளது; இது BYOD இல்லாமல் கடினமாகவிருக்கும்.

மாணவர்கள் சாதனங்களை உபயோகிக்கக்கூடிய வழிகள் சில கீழேயுள்ளன:

ஆரம்பநிலை வகுப்பறை (K முதல் தரம் 3)

- சொல்லகராதியின் விருத்தி
- இணையதளங்களை அணுகுதல்
- கணித கோட்பாடுகளுடன் உதவி பெறுவதற்கு இணையத்திலுள்ள விளக்கப்படங்களின் உபயோகம்
- ஒளிப்படக்கலை மற்றும் நிகழ்பட உருவாக்கம்
- பாடத்திட்டத்தை அடிப்படையாகக் கொண்ட விளையாட்டுகள்/செயலிகள்

இளநிலை வகுப்பறை (தரங்கள் 4 முதல் 5)

- இணையதளங்களை அணுகுதல்/ஆராய்ச்சி
- ஒளிப்படக்கலை மற்றும் நிகழ்பட உருவாக்கம்
- ஆவணம் மற்றும் காட்சியளிப்பு உருவாக்கம்/திருத்தவமைப்பு
- பாடத்திட்டத்தை அடிப்படையாகக் கொண்ட விளையாட்டுகள்/செயலிகள்
- wikis, blogs, podcasts (விக்கி, வலைப்பதிவுகள், இணைய அலைபரப்புகள்)
- குறிப்பெடுத்தல்
- சொல்லகராதியின் விருத்தி

- கணித்தல்/வரைபடச் செயற்பாடுகள்
- கணித கோட்பாடுகளுடன் உதவி பெறுவதற்கு இணையத்திலுள்ள விளக்கப்படங்களின் உபயோகம்
- செயற்திட்ட மேம்பாடு
- திட்டமிடுதற் கருவி/நாட்காட்டி
- நிலப்படங்கள்
- வாக்குப் பதிவு
- ஒளிநாடா கலந்தாய்வு

இடைநிலைப் பாடசாலை (தரங்கள் 6 முதல் 8)
- இணையதளங்களை அணுகுதல்/ஆராய்ச்சி
- ஒளிப்படக்கலை மற்றும் நிகழ்பட உருவாக்கம்
- ஆவணம் மற்றும் காட்சியளிப்பு உருவாக்கம்/திருத்தவமைப்பு
- பாடத்திட்டத்தை அடிப்படையாகக் கொண்ட விளையாட்டுகள்/செயலிகள்
- wikis, blogs, podcasts (விக்கி, வலைப்பதிவுகள், இணைய அலைபரப்புகள்)
- குறிப்பெடுத்தல்
- சொல்லகராதியின் விருத்தி
- கணித்தல்/வரைபடச் செயற்பாடுகள்
- கணித கோட்பாடுகளுடன் உதவி பெறுவதற்கு இணையத்திலுள்ள விளக்கப்படங்கள்/உருவகப்படுத்தல்களின் உபயோகம்
- செயற்திட்ட மேம்பாடு
- திட்டமிடுதற் கருவி/நாட்காட்டி
- நிலப்படங்கள்
- வாக்குப் பதிவு
- ஒளிநாடா கலந்தாய்வு

உயர்நிலைப் பாடசாலை (தரங்கள் 9 முதல் 12)
- இணையதளங்களை அணுகுதல்/ஆராய்ச்சி
- ஒளிப்படக்கலை மற்றும் நிகழ்பட உருவாக்கம்
- ஆவணம் மற்றும் காட்சியளிப்பு உருவாக்கம்/திருத்தவமைப்பு
- பாடத்திட்டத்தை அடிப்படையாகக் கொண்ட விளையாட்டுகள்/செயலிகள்
- wikis, blogs, podcasts (விக்கி, வலைப்பதிவுகள், இணைய அலைபரப்புகள்)
- குறிப்பெடுத்தல்
- Office உற்பத்தித்திறன், உதா. அட்டவணைச்செயலிகள்
- கணித்தல்/வரைபடச் செயற்பாடுகள்
- கணித கோட்பாடுகளுடன் உதவி பெறுவதற்கு இணையத்திலுள்ள விளக்கப்படங்களின் உபயோகம்
- செயற்திட்ட மேம்பாடு
- திட்டமிடுதற் கருவி/நாட்காட்டி
- நிலப்படங்கள்
- வாக்குப் பதிவு
- ஒளிநாடா கலந்தாய்வு

**கம்பியில்லா வலையமைப்பு - இலவசமானது மற்றும் அணுகத்தக்கது**

பாடசாலையில் உள்ளபொழுது, இலவசமாக அணுகத்தக்கதான, மன்றத்தின் கம்பியில்லா வலையமைப்பை மாணவர்கள் பயன்படுத்துதல் அவசியமாகும். வகுப்பறையிலுள்ள பொழுது,

அவர்கள் பணஞ்செலுத்தும் சொந்த தரவுத் திட்டங்களை அணுக அனுமதிக்கப்படமாட்டார்கள். மாணவர்கள் பாடசாலையில் இணையத்தைப் பயன்படுத்தும் வேளையில், இணையத்திலுள்ள தகாத உள்ளடக்கங்களை அணுகுவதைத் தவிர்ப்பதற்கும் இவ்வலையமைப்பின் வடிகட்டி உதவும்.

**நிபுணர்களின் ஆலோசனை கம்பியில்லா வலையமைப்பின் ஆபத்தின்மையை உறுதிப்படுத்த உதவுகின்றது**

கற்பதற்கும் பணிபுரிவதற்கும் பாதுகாப்பான மற்றும் தகுந்த அமைவிடங்களை வழங்குவது Peel (பீல்) மன்றத்திற்கு ஒரு முக்கிய முன்னுரிமையாகும். Wi-Fi இனைக் கருதும்பொழுதும் இது உண்மையானதாகும்.

Wi-Fi இனைப் பற்றி எவ்விதமான முடிவுகளையும் எடுக்கமுன்பு, நம்பகமான மருத்துவ நிபுணர்களின் ஆலோசனையை மன்றம் நாடியது. அதன் மூலம் பெறப்பட்ட ஆதாரம் - Peel Public Health (பீல் பொதுச் சுகாதாரம்), Public Health Ontario (பொதுச் சுகாதாரம் ஒன்றாரியோ), Health Canada (சுகாதாரம் கனடா), மற்றும் World Health Organization (WHO) (உலக சுகாதார நிறுவனம்) ஆகியவற்றிலிருந்து - மிகவும் தெளிவானதாகும்.

வானொலி அலைவெண் கதிர்வீச்சும் மனித உடல்நலத்தில் அதன் தாக்கவிளைவுகளையும் குறித்து காணப்படும் பற்பல ஆய்வுகளின்படி, எதிர்மறையான உடல்நல விளைவுகள் எதுவுமில்லை என்று Public Health Ontario (பொதுச் சுகாதாரம் ஒன்றாரியோ) கூறுகின்றது. பொது இடர்காப்பின்மையிற்கான குறிப்பிடப்பட்ட வரம்புகள் அனைவருக்கும் பொருந்துகின்றன – வயதுகூடியவர்கள், உடல்நலப் பிரச்சினைகள் கொண்ட நபர்கள், குழந்தைகள், மற்றும் கர்ப்பிணிப் பெண்கள் உட்பட - அத்துடன், அவை தொடர்ச்சியான, 24/7 கதிர்வீச்சையும் அனுமதிக்கின்றன.

அதுமட்டுமல்லாது, WHO பின்வருமாறு கூறுகின்றது: "இன்றுவரை சேகரிக்கப்பட்டிருக்கும் ஆராய்ச்சி விளைவுகளையும் மிகக்குறைந்த கதிர்வீச்சு மட்டங்களையும் கருதும்பொழுது, அடிவார நிலையங்கள் மற்றும் கம்பியில்லா வலையமைப்புகளிலிருந்து வெளிப்படுத்தப்படும் பலங்குறைந்த வானொலி அலைவெண் சமிக்ஞைகள், எதிர்மறையான உடல்நல விளைவுகளை ஏற்படுத்துகின்றன என்பதை மெய்ப்பிக்கும் அறிவியற்பூர்வமான ஆதாரங்கள் எதுவும் காணப்படுவதில்லை."

பாடசாலைகளில் தொழில்நுட்பத்தின் உபயோகிப்பைக் குறித்து எமக்கு வழிகாட்டுவதற்கு நாம் பொதுச் சுகாதார முகமையகங்களின் நிபுணத்துவத்திலும் தரநிலைகளிலும் தொடர்ந்து நம்பிக்கை வைத்திருப்போம். நாம் எல்லா சட்டங்களிற்கும் இணங்கி நடப்பதுடன், Wi-Fi மட்டங்களின் தொடர்பின்றிய வகைமாதிரியான பரிசீலிப்பை நடாத்துவோம். எப்பொழுதும் போலவே, எங்கள் முடிவுகள் மாணவர்களுக்கு மிகவுகந்ததையே அடிப்படையாகக் கொண்டுள்ளன.

உங்களுக்கு தெரியுமா…நாம் பாடசாலைகளில் நிறுவும் பெறுவழி சந்திகள், இல்லங்களிலுள்ள வழிச்செயலிகள் உபயோகிக்கும் சக்தியின் ஒரு மிகச்சிறிய அளவையே பயன்படுத்துகின்றன – அவை தொழிலக-சக்தியைக் கொண்டுள்ளவையாக கருதப்படுவதில்லை. கம்பியில்லா தொழில்நுட்பத்தையும் உடல்நலத்தையும் பற்றி மேலுமறிவதற்கு, அணுகுங்கள்: http://bit.ly/wifi_health.

**மாணவர்கள் சிறந்த எண்ணியல் குடியுரிமையைக் கற்கின்றனர்**

நபர்கள் தம் சாதனங்களை ஒழுங்கான முறையில் பயன்படுத்தும் ஓர் உலகிலேயே மாணவர்கள் வாழ்ந்து தொழில்புரியவிருக்கின்றனர். அவர்கள் தொழில்நுட்பத்தை பாதுகாப்பாகவும், செயற்திறனாகவும், நன்னடத்தையுடனும், மதிப்புடனும் உபயோகிக்கக் கற்றுக்கொள்வது அவசியமாகும். பாடசாலையிலிருந்தோ இல்லத்திலிருந்தோ, எங்கிருந்து தகவல்களை அணுகினாலும், The Code of Conduct (நடத்தைக் கோட்பாடு)ம் கல்விசார் நாணயமும் தொழில்நுட்பத்தின் உபயோகிப்பிற்கு பொருந்துகின்றன.

பாடசாலை நடத்தைக் கோட்பாடுகள் மற்றும் Peel (பீல்) மன்றத்தின் Digital Citizenship Policy (எண்ணியல் குடியுரிமைக் கொள்கை) #78 இன்படி, சொந்த சாதனங்களின் பொறுப்பான உபயோகிப்பை நாம் அரவணைக்கின்றோம். இக்கொள்கையை நீங்கள் இங்கு கண்டறியலாம்: http://bit.ly/policy78.

**மேலும் அறியுங்கள்**

மேலதிக தகவல்களும், அராபிய மொழி, பெங்காலி, குஜராத்தி, ஹிந்தி, பஞ்சாபி, இலகுவாக்கப்பட்ட சீன மொழி, ஸ்பானிய மொழி, தமிழ், வியட்னாமீஸ், மற்றும் உருது ஆகியவற்றில் மொழிபெயர்ப்புகளும், இணையத்தில் இங்கு அணுகத்தக்கதாகவுள்ளன: **www.peelschools.org/byod.**

இது Parent Involvement Committee (PIC) (பெற்றார் ஈடுபாட்டு சங்க)த்தின் கூட்டாண்மையுடன் தயாரிக்கப்பட்டது. மாணவரின் வெற்றியிற்கு ஆதரவளிக்குமுகமாக, பாடசாலைகளிலும் மாகாணம் பூராகவும், அர்த்தமுள்ள பெற்றார் ஈடுபாட்டிற்கு ஆதரவையும், ஊக்குவிப்பையும், மேம்பாட்டையும் PIC வழங்குகின்றது. PIC இனைப் பற்றி மேலுமறிவதற்கு **www.peelschools.org** இலுள்ள "Parents - Get involved" பகுதியை அணுகுங்கள்.

Parent
Involvement
Committee